**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 335/2022 |
| நாள் | 21.01.2026 |
| வா.சா.1 | பழனிச்சாமி |
| வயது | 45 |
| ஊர் | பஞ்சமாதேவி |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 9ம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். பிரதிவாதி என்னுடைய உறவினர்இல்லை. பிரதிவாதியை நான் பணம் கடனாக கொடுத்த சமயத்தில் தான் பார்த்தேன். அதற்கு முன்பாக பிரதிவாதியை தெரியாது. நான் பிரதிவாதிக்கு கடன் கொடுப்பதற்கு முன்பாக பிரதிவாதி என்னுடன் தொலைபேசியில் பேசவில்லை. நான் கடன் கொடுத்தது பின்னிட்டு, பிரதிவாதியை நான் தொலைபேசியில் அழைக்கவில்லை. பிரதிவாதியின் குடும்ப விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. கடனுறுதிச்சீட்டில் சாட்சி கையொப்பம் செய்துள்ள தண்டபாணி மற்றும் கனகராஜ் ஆகியோர் என்னுடைய உறவினரா என்றால் இல்லை. தெரிந்த நபர். மேற்படி தண்டபாணி மற்றும் கனகராஜ் பிரதிவாதியின் உறவினரா என்றால் இல்லை. மேற்படி தண்டபாணி மற்றும் கனகராஜ் ஆகீயோர் பிரதிவாதியின் ஊரை சார்ந்தவர்களா என்றால் இல்லை. பிரதிவாதியின் கணவரின் தங்கை மகன் சுரேஷ் என்பவரை தெரியமா என்றால், எனக்கு தெரியாது. மேற்படி சுரேஷ் என்பவர் கரூர் மாநகராட்சியின் 14 வது வார்டு கவுன்சிலர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி சுரேஷ் என்பவர் எனக்கு நன்றாக தெரியும் என்றும், இவ்வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. பிரதிவாதி என்ன தொழில் செய்து வந்தார் என்ற விவரம்

எனக்கு தெரியாது. பிரதிவாதி, அவரது குடும்ப செலவிற்காக கடன் வாங்கியதாக எனது வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலுத்திலும் குறிப்பிட்டுள்ளேன். கடந்த 02.06.2018 ம் தேதியன்று பிரதிவாதியின் மகன் பைனான்ஸ் தொழில் செய்து வந்தபோது, காணாமல் போய்விட்டார் என்றும், அதன்பின்னிட்டு பிரதிவாதி மட்டுமே இருந்து வருகிறார் என்றும், அதனால் அவர் குடும்ப செலவிற்காக கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றால், சரியல்ல. பிரதிவாதியின் கணவர் உள்ளாரா என்ற விவரத்தை நான் கேட்டுஅறிந்தேனா என்றால், நான் கடன் கொடுத்தபோது, பிரதிவாதியின் கணவர் இல்லை. பிரதிவாதி ஒரு விதவை என்றும், அவரது மகன் காணமால் போய்விட்டார் என்றும், பிரதிவாதியின் கணவர் இறந்துவிட்டதாலும், பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டி, பிரதிவாதியின் கணவரின் தங்கை மகன் கவுன்சிலர் சுரேஷ் என்பவரின்அறிவுறுத்தலின் பேரில் பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் வங்கியின் மூலமாக வரவு செலவு செய்துள்ளேன். என்னுடைய வருமான வரிகணக்கை நான் வருடாவருடம் தாக்கல் செய்கிறேன். என்னுடைய வருமான வரி கணக்கில் பிரதிவாதிக்கு கடன் கொடுத்த விவரத்தை காண்பித்துள்ளேனா என்றால், இல்லை. ரூ.20,000 த்திற்கு மேல் கடன் கொடுக்க வேண்டும் என்றால் காசோலை மூலமாகவோ, அல்லது வரவு காசோலை மூலமாக கொடுக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரிந்திருந்தும், நான் ரூ.3,75,000/–த்தை பிரதிவாதிக்கு ரொக்கமாக கொடுத்ததாக வழக்குரையில் குறிப்பிட்டிருப்பது முற்றிலும் தவறு என்றால், சரியல்ல. பிரதிவாதிக்கும், எனக்கும் இடையே எவ்வித முன்அறிமுகமும் இல்லாமல் ரூ.3,75,000 ஐ நான் ரொக்கமாக பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக கூறுவது முற்றிலும் பொய் என்றால், சரியல்ல. சுரேஷ் என்ற கவுன்சிலர் பூர்த்தி செய்து கொடுத்த மோசடியான கடனுறுதிச்சீட்டை வைத்து பிரதிவாதியிடமிருந்து தவறான ஆதாயம் பெறுவதற்காக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. தாவா கடனுறுதிச்சீட்டில் சாட்சி கையொப்பம் செய்துளள நபர்கள் நான் தயார்

செய்த சாட்சிகள் என்றால், சரியல்ல. பிரதிவாதிக்கு எந்த பணத்தேவையும் ஏற்படவில்லை என்றும், வழக்குரையில் குறிப்பிட்டுள்ள தேதியன்று பிரதிவாதி, என்னுடைய வீட்டிற்கு வந்து எவ்வித கடன் தொகையும் பெறவில்லை என்றால், சரியல்ல. ஆகவே, தாவா தள்ளுபடி செய்யக்கூடியது என்றால், சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.